**தேசிய விளையாட்டுக்கள் நிதியம் - 2018**

---

## 1.1 அபிப்பிராயம்

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாக நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் நியாயமான வகையில் குறிப்பிடக்கூடிய வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல் .

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1973 இன் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவு | அமைச்சு செயலாளரினால் ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் முடியுமான வரை நிதியத்தின் நிர்வாகம் தொடர்பான அறிக்கை யொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக நிர்வாக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளமையால் அறிக்கைகளை அச்சிடுவதற்கு பெறுகை நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞானபனத்தை அமைச்சருக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேசிய விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த துடன் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 4,121,664 பெறுமதியான 108 காசோலைகள் தொடர்பாக உரிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் நானாவித கணக்குகளில் 102 காசோலைகள் மற்றும் வங்கிக்கு கணக்கிணக்க கூற்றில் 06 காசோலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன . | வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பணத்தை ஏப்ரல் மாதத்தின் போது மாற்றல் பத்திரத்தின் மூலம் வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 26,110,110 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,824,605 ஆக இருந்தது. அது நிதி விளைவுகளில் ரூபா 20,285,505 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு முதலீட்டு வட்டி ரூபா 1,142,533 ஆல் குறைவடைந்தமை, தேசிய லொத்தர் சபையின் பெறுவனவுகள் ரூபா 2,901,879 ஆல் குறைவடைந்தமை, அரசின் மானியங்கள் ரூபா 8,000,000 ஆல் குறைவடைந்தமை, தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு தொகுதியின் வருமானம் ரூபா 2,168,910 ஆல் குறைவடைந்தமை, சர்வதேச போட்டிகளுக்கான செலவினம் ரூபா 3,766,320 ஆல் அதிகரித்தமை, நானாவித செலவினம் ரூபா 2,399,898 ஆல் அதிகரித்தமை மற்றும் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு தொகுதியின் செலவினம் ரூபா 3,898,011 ஆல் அதிகரித்தமை பிரதானமான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தினால் செய்யப்படுகின்ற முதலீடுகளுக்காக கிடைக்கும் வட்டி | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக விடுவிப்பு கடிதமொன்று பெற்றுக்கொள்வதற்காக | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக விடுவிப்பு கடிதமொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டதாக விடுவிப்பு கடிதமொன்று பெற்றுக்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டில் 4 சந்தர்ப்பங்களில் ரூபா 432,645 ஆன நிறுத்திவைத்தல் வரி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரி திணைக்களததிற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |

3.2 **சர்ச்சைக்குரியதன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் சேவை புரியும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் 4 பேருக்கு நிதியத்தின் மூலம் விளையாட்டு பயிற்சியாளர் படிகளாக ரூபா 1,185,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த 4 உத்தியோகத்தர்களுக்கும் விளையாட்டு பயிற்சியாளர் படிகள் கொடுப்பனவு செய்யும் போது அவர்களின் செயலாற்றல் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்படி 4 உத்தியோகத்தர்களில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு பொது நலவாய அமைப்பு பாரந்தூக்கும் போட்டியில் விளையாட்டு பயிற்சியாளராக போட்டி வெற்றிக்காக ரூபா 1,600,000 ஆன தொகை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அந்த உத்தியோகத்தர்களுக்கு செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்கலத்தில் தாபன விதிக்கோவையின் 1.4.1 தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரச உத்தியோகத்தர்களுக்கு இவ்வகையான கொடுப்பனவின் போது தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1973 இன் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியம் அமைச்சின் செயலாளரினால் நிர்வகிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்காக மீளாய்வாண்டில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் வருமானம் ரூபா ரூபா 61.9 மற்றும் செலவினம் ரூபா 88 மில்லியனாக இருந்ததுடன் நிதியத்திற்குச் சொந்தமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட சொத்துக்களின் கூட்டுத்தொகை ரூபா 139 மில்லியனாக இருந்தது. நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதியத்திற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன், அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் கணக்காய்வொன்றோ மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | விளையாட்டு அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து இவ்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்படல் வேண்டும். |

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாதிடப்பட்ட செலவினங்களையும் உள்ளவாறான செலவினங்களையும் ஒப்பிடும் போது 13 செலவின விடயங்களுக்கிடையே 19 சதவீதம் முதல் 346 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை யென அவதானிக்கப்பட்டது. | முன்னைய ஆண்டின் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவினம் அடிப்படையில் பாதீடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான எதிர்கூறலொன்று பின்பற்றப்பட்டு பாதீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் விலகல் தொடர்பாக காலரீதியில் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். |